# அகில இலங்கை "சினெட்" மகாநாட்டுக்கு

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பதுவியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஆடு சித்திரைமீ 6-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 14-ம் இல.

## காலி மேற்றிராசனம் தயார்

திருச்சபையின் ஆட்சிமுறையில் வத்திக்கான் சங்கத்தின்பின் "சினெட்" சங்கங்கள் முக்கியத்துவம் அடைந்திருக்கின்றன. 'சினெட்' என்பது ஒரு சமயத்தின் சங்கமாகும். பாப்பரசருக்கு உதவியாக ஒரு மகா சினெட் இருக்கின்றது. அதுபோலவே ஒவ்வொரு மேற்றிராசனத்திலும், அம்மேற்றிராசனத்திலிருக்கும் ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் ஒரு சினெட் இயங்குவது வத்திக்கான் சங்கத்தின் குறிக்கோளாகும். முற்காலத்தில் சினெட் சபையில் பெரும்பாலும் குருமாரும் மேற்றிராணிமாருமே இருந்தனர். ஆனால் இன்று திருச்சபையில் இல்லறத்தோருக்கும் ஆட்சியில் இடம் அளிக்கப்பட்டிருக்கின்றதனால் இல்லறத்தோரும் சினெட் சபைகளில் இடம் பெறுகின்றனர். இதற்கிணங்கப் பாப்பரசருக்கும், மேற்றிராணிமாருக்கும், விசாரணைப்பங்குக் குருமா

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# 23-ம் அருளப்ப பாப்பரசருக்கு

## அர்ச்சியசிஷ்டபட்டம் அருளமுயற்சிகள்



23-ம் அருளப்ப பாப்பரசருக்கு அர்ச்சியசிஷ்டபட்டமருள திருச்சபையின் முறைப்படி ஆகவேண்டிய ஆராய்ச்சிகள் தொடக்கப்பட்டிருக்கின்றன. அவர் கருதினாலாகக் கடமையாற்றிய வெனிஸ் பிரிவில் அவரது சீவியத்தில் தோன்றின பரிசுத்ததனங்களை வெளிப்படுத்துமாறு மக்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர். இன்று அப்பிரிவில் கருதினாலாக இருக்கும் ஊர்பானி ஆண்டவரவர்கள் 23-ம் அருளப்ப பாப்பரசரின் பரிசுத்ததனத்தை தாம் அறிந்தளவு வெளிப்படுத்தியிருக்கின்றார். இங்கு இவ்வாராய்ச்சிகள் முடிந்ததன்பின் 23-ம் அருளப்பரின் ஆரம்பகாலம் செலவாகிய பேர்காமோப்பிரிவிலும், பின் அவர் வசித்த பல்கேரியா, ஸ்தான்புல், பாரிஸ், உரோமாபுரியிலும் ஆராய்ச்சிக்குழுதன் வேலையைத் தொடர்ந்து நடத்தும். 23-ம்அருளப்பபாப்பரசரது ஆழ்ந்தபக்தியும், தூய்மையானமனமும், பிறர்சிநேகமும்பற்றிய அநேகசம்பவங்களும் வெளிவந்திருக்கின்றன.

## உலக வியாபார வர்த்தக ஸ்தாபனத்தின் வத்திக்கான் பிரதிநிதியின் பிரலாபம்

சென்றமாதம் இந்திய தேசத்தில் யூ. என். ஓ. ஆதரவில் நடைபெற்ற உலக வியாபார வர்த்தக ஸ்தாபனத்தாரின் மகாநாட்டில் வத்திக்கானின் அவதானியாகக் கடமையாற்ற நியமிக்கப்பட்டவர் வணக்கத்துக்குரிய ஹென்றி றீட்மற்றன் அடிகளார். அம்மகாநாடு முடிந்ததும் அவர் வத்திக்கான் திரும்பிச் செல்வதன்முன் அம்மகாநாட்டில் அவரை வருத்திய ஒருபெரும் துயரத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். அது எதுவெனில், முன்னேற்றமடையாத தேசங்களைத் தூக்கிவிட முன்னேற்றமடைந்த தேசங்கள் போதியளவு உதவிசெய்ய முன்வராததே. திருச்சபை உலகத்தின் பல இடங்களிலும் முன்னேற்றம் அடையாத தேசங்களுக்கு உதவி செய்யப் பெருமளவு பணஉதவி செய்து வருகின்றது. ஒவ்வொரு தேசமும் இதற்காகத் தனது வருமானத்தில் ஒருசதவீதம் கொடுத்துதவ முடிவு செய்துகொண்டது உண்மைதான். ஆனால், இதுபோதுமாயில்லை. வானவெளி ஆராய்ச்சி நவீன யுத்த தளபாடங்களில் கோடாகோடி செலவு செய்கின்ற பலம்பொருந்திய தேசங்கள் ஒருசதவீதமல்ல, பலசதவீதம் உதவவேண்டுவது அவசியமாகின்றது என்கிறார் றீட்மற்றன் அடிகளார்.

## "பாப்பரசருக்கு தலைமை கொடுங்கள்"

ஜெனிவா நகரில் உலக கிறிஸ்துவ சபையின் ஸ்தாபனத் தலைமைக் காரியாலயம் இருக்கின்றது. இந்த ஸ்தாபனத்தின் இளைஞர் பகுதிக் காரியதரிசி திரு. வான் டென் கீவல் என்பவர். இவர் புறொட்டஸ்தாந்து மதவேதபாரகர் ஒருவர். இவர் "கிறிஸ்துவசபைகளின் சார்பில் பாப்பரசரே பேசுதற்கு மிகப் பொருத்தமானவர் என்பதைப் பல கிறிஸ்துவ சபைகளும் இன்று ஒத்துக்கொள்கின்றன" என்கிறார். மேலும் அவர் கூறியதாவது: "ஒற்றுமைச் சங்கத்தை ஒன்றுகூட்டவோ, ஆயர்களுக்குமேல் தனி ஆயராக விளங்கவோ, கிறிஸ்துவ சபைகளுக்கு இடையில் ஏற்படும் ஒற்றுமைகளைப் பிரகடனம் பண்ணவோ, கலகங்களைத் தீர்த்து வைக்கவோ பாப்பரசருக்கு இருக்கும் வாய்ப்புப்போல் வேறு ஒருவருக்கும் இல்லையே ஆனதினாலேதான் வத்திக்கான சங்கத்தில் பிரகடனம் செய்யப்பட்ட ஆயர்களின் கூட்டுப்பொறுப்பின் வழியாக நாம் ஒற்றுமை அடைவதற்கு வழியுண்டு" என்கிறார்.

## ஐக்கிய அமெரிக்க தேச சிறுபிள்ளைகளுக்குப் பாப்பரசரின் விண்ணப்பம்

அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள கத்தோலிக்கப் பள்ளிப் பிள்ளைகளுக்குத் தபசுகாலத் தொடக்கத்தில் பரிசுத்ததந்தை வழமைபோல் கொடுத்துவரும் வானொலிப் பிரசங்கத்தில் இம்முறை அவர்களை உலக வறுமைப் பிணியை அகற்றுவதில் தமது கவனத்தைச் செலுத்துமாறு உருக்கமாக கேட்டிருக்கின்றார். அமெரிக்க தேசப் பள்ளிப் பிள்ளைகளுக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட பெரும் சலுகைகளை மனதில்வைத்து, உலகிலே பசியால்வாடி, உடுக்க உடையின்றியும், வசிக்க வீடின்றியும், உண்ண உணவின்றியும் தவிக்கும் பிள்ளைகள்மேல் இரக்கம் கொண்டு தமமாலான பரித்தியாகங்கள் செய்து உதவி புரியுமாறு பரிசுத்ததந்தை அவர்களைக் கேட்டிருக்கின்றார்.

## பழைய மேற்றிராசனத்துக்குப் புதிய பெயர்



"திருகோணமலை மேற்றிராசனம் எதிர்காலத்தில் திருகோணமலை-மட்டக்களப்பு மேற்றிராசனமென்று அறியப்படும்"எனத் திருகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி, எஸ்.ஜே. ஆண்டகைஅவர்கள் பரிசுத்தபாப்பரசரின் பேட்டிபெற்றுக்கொண்டு திரும்பியபோது தமக்கு வரவேற்பளிக்கக் குழுமியிருந்த மட்டக்களப்புக் கத்தோலிக்கமக்களின் பெருங்கூட்டத்தில் அறிவிக்கலாயினர்.

ஆண்டகைஅவர்கள் பரிசுத்தமரியன்னை ஆலயத்தின் பிரதமவாயிலிலே குரவர்களாலும், சந்நியாசர், கன்னியாஸ்திரிகளாலும், மற்றும் விசுவாசிகளாலும் வரவேற்கப்பெற்றார். மேற்றிராசன ஐக்கியசங்கத்தின் தலைவரான திரு. கே, எல். இராசேந்திரம்அவர்கள் அவருக்கு மாலைசூட்டி வரவேற்புமொழிகள்பகர்ந்து வாழ்த்துக்கள் கூறினின்றார்.

ஆண்டகைஅவர்கள் அளித்தபதிலிலே, நாம்திரும்பவும் சேமமாக எமதுமேற்றிராசனம்வந்து சேர்ந்ததையிட்டுப் பெருமகிழ்வெய்துகிறோம்; இன்றையஉலகின் நெருக்கடியானநிலைமை பரிசுத்ததந்தைக்குப் பெரிதும் மனச்சஞ்சலத்தை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது; அவரது செபவேண்டுகோளுக்கு-அதிகமாகச் செபஞ்செய்யுங்களென்ற ஆர்வமான வேண்டுகோளுக்கு எல்லோரும் செவிசாய்க்குமாறு வற்புறுத்திக்கேட்டுக்கொண்டார்.

வரவேற்புவிழா நிறைவானதும் ஆண்டகைஅவர்கள் மரியன்னையின் தமது பதில்ஆசனக்கோவிலில் அனைவருக்கும் பாப்பாண்டவரின் ஆசியருளித் "தெதேயும்" எனும் தேவதோத்திர கீதம்பாடித் திவ்வியசற்பிரசாத ஆசிர்வாதம் வழங்கினார்.

## கௌத்தமலாதேச அதிமேற்றிராணியார் தேச எதிரிகளின் கையில்

மத்திய அமெரிக்க தேசமாகிய கௌத்தமலாபிரிவின் அதிமேற்றிராணியார் கசறிகோஅடிகளார் அத்தேச அரசாங்கத்துக்கு எதிராகப் புரட்சிசெய்துவரும் கலகக்காரர் கையில்சிக்கிக் கொண்டார் இவர் மெக்சிக்கோ தேசத்துக்குப்போய்த் திரும்பும் வழியில் இவர்களால் வழிமறித்து இரகசியமான ஓர் இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். அத்தேசத்தில் அரசாங்கத்தவரும் புரட்சிக்காரரும் பெரும்பாலும் கத்தோலிக்கரே — ஆனதால் இவருடைய உயிருக்குஆபத்துவருமென எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும் அரசியற்செல

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### சித்திரை

| | | | |
|---|---|---|---|
| 7 | ஞா. | திருப்பாடுகளின் 2-ம் ஞா. குருத்து ஞாயிறு | [ஊ] |
| 8 | தி. | பரிசுத்தவார திங்கள் | [ஊ] |
| 9 | செ. | பரிசுத்தவார செவ். | [ஊ] |
| 10 | பு. | பரிசுத்தவார புதன் | [ஊ] |
| 11 | வி | பெரிய வியாழன் | [வெ] |
| 12 | வெ. | பெரிய வெள்ளி | [க] |
| 13 | ச. | பெரிய சனி | [வெ |

சத்தியவேத பாதுகாவலன்

1968-ம் ஞூ சித்திரை மீ 6-ங்உ

## தேவமக்கள் எனப்படும் திருச்சபை

தேவன் தமது சீவியத்தில் பங்கு பற்றுமாறு மனிதனைச் சிருஷ்டித்தார். ஆதாமின் வீழ்ச்சிக்குப் பின்னரும் மனிதனைக் கைவிடாது அவனது மீட்புக்கு ஏற்பாடு செய்தார்.

மனிதனைத் தனிப்பட்டமுறையில் மட்டுமல்லாது ஒரு முழுச் சமூகமாகவும் மீட்கச் சித்தங்கொண்ட தேவன் இஸ்ராயேல் சனத்தைத் தேர்ந்தெடுத்தார். பின் வரப்போகும் கிறிஸ்துவின் திருச்சபைக்கு ஓர் ஆயத்தமாக இம்மக்களை கற்பித்து சுத்திகரித்துவந்தார். எனவே திருச்சபையே தேவனின் புதிய மக்கள்.

கிறிஸ்துவின்மூலம் சகலமனிதரையும் மீட்டு தமது சுவீகாரப் புத்திரராக்கவிரும்பினார் தேவன். தேவசித்தத்தின்படியே கிறிஸ்துநாதர் திருச்சபையை ஸ்தாபித்தார். அவர் வானகத்திற்கு எழுந்தருளியபின் சகல மக்கள் மத்தியிலும் தமது இராச்சியத்தை ஸ்தாபிப்பதற்குத் துணைபுரியும்படி தமது தூய ஆவியை அனுப்பினார். இதுவே திருச்சபையின் பணியாகும்.

இத்திருச்சபையின் இயல்பு ஒரு பரமரகசியமாகையால் அதை நேரடியாக வர்ணிக்க முடியாது. அதை வர்ணிப்பதற்குப் பல உருவகங்கள் கையாளப்படுகின்றன, இவற்றுள் மிகப்பொருத்தமான ஓர் உருவகம் புனித சின்னப்பர் கூறியதாகும்—அதாவது கிறிஸ்துவின் சரீரம்; இச்சரீரத்தில் கிறிஸ்து தலையாகவும் ஏனையோர் அங்கங்களாகவும் இருக்கின்றனர். தேவதிரவிய அனுமானங்கள்மூலம் கிறிஸ்துவின் உயிர் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

கிறிஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபை விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்னும் புண்ணியங்களைக் கொண்ட ஒரு சமூகமாய், கிறிஸ்துவின் அருட்கொடைகளையும், உண்மையையும் பிறருக்கு அளிக்கும் ஒருஸ்தாபனமாய் விளங்குகிறது.

மனித உடலில் சிரசின் வேலையில் எல்லா உறுப்புக்களும் பங்குபற்றுவதுபோல், ஞானஸ்நானத்தின்மூலம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்துவம்பெற்ற மக்கள், கிறிஸ்துவின் பணியில் பங்குபற்றுகிறார்கள். ஆனால் ஒவ்வோர் உறுப்புக்கும் தனித்தனி வேலை உண்டு. ஆகவேதான் பொதுநிலையினரின் குருத்துவத்துக்கும், அபிஷேகம் பெற்றவரின் குருத்துவத்துக்கும் வேறுபாடு உண்டு. ஆனால் சாதாரண சரீரத்தில் சிரசுக்கு மட்டுமே புத்தியும், சுயாதீன சித்தமும் உண்டு. ஆனால் இஞ்ஞானச்சரீரத்தில் எல்லா அங்கத்தினருக்குமே புத்தியும் சுயாதீன சித்தமும் உளதாகையால் அவர்கள் அதற்கேற்றவாறு நடந்துகொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் குருத்துவம் மூன்று அம்சங்களைக் கொண்டதாகும். அவர் தீர்க்கதரிசியாகவும், தூய்மைப்படுத்துபவராகவும், அரசராகவும், இருக்கிறார். கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குபெறும்சகலரும் இம்மூன்று அம்சங்களிலும் பங்குபெறுகிறார்கள். அபிஷேகம் செய்யப்பட்ட குருமார் நற்கருணைப்பலியை நிறைவேற்றுவதாலும், தேவதிரவிய அனுமானங்களை அளிப்பதாலும் தூய்மைப்படுத்தும் பணியில் பங்குபற்றுகிறார்கள். தேவமக்கள் தமது தவவாழ்க்கையினாலும், திருப்பலியில் பங்குகொள்வதாலும் தேவதிரவிய அனுமானங்களைப் பெறுவதாலும் இப்பணியில் பங்குபற்றுகின்றனர்.

குருமார் தமது போதனையினாலும், முன்மாதிரிகையாலும் தீர்க்கதரிசனப் பணியில் பங்குபற்றுகின்றனர். பொதுநிலையினர் கிறிஸ்துவுக்கு சாட்சிபகர்வதாலும் தமது அந்தஸ்துக்கேற்றபடி சுவிசேஷ போதனைகளைப் பின்பற்றுவதாலும் அதிற் பங்குபற்றுகின்றனர்.

அபிஷேகம்பெற்ற குரு தமது மந்தையைக் கவனித்துவருவதால் கிறிஸ்துவின் ஆளுந்தன்மையில் பங்கெடுக்கிறார். பொதுநிலையினர் தமது மேய்ப்பரின் அலுவல்களில், விசேஷமாக இல்லற அப்போஸ்தலத்துவத்தில் பங்கெடுப்பதால் இதில் பங்குபற்றுகிறார்கள்.

திருச்சபையின் விருத்திக்குப் பயன்படும்படி ஒருவருக்குத் தூய ஆவியானவர் ஒரு விசேஷ கொடையை அளிக்கலாம். திருச்சபையின் ஆட்சியாளர் இக்கொடையைப் பரிசோதித்து தகுந்த வழியில் செலுத்தவேண்டும்.

தீர்க்கதரிசனக் கொடையின் பயனை மேற்றிராணிமார் பாப்பரசர் அடங்கியகுழு எவ்விதம் எவ்விதம் போதனையில் தவறமுடியாதோ அதேபோல் திருச்சபை முழுவதும் கூட்டாக விசுவாசத்தில் தவறுசெய்ய முடியாது.

கிறிஸ்துவின் இராஜரீக குருத்துவத்தின் கடமைகளை தத்தம் அந்தஸ்துக்கேற்றபடி நிறைவேற்றுவதற்கு வேண்டிய அருட்கொடைகளைத் தூயஆவியானவர் உறுதிபூசுதல்மூலம் அளிக்கிறார்.

எல்லா மக்களும், சகலசாதி சனங்களும் தேவமக்களாகும்படி அழைக்கப்படுகிறார்கள். ஆனால் திருச்சபை மக்களின் உலக நன்மைகளுக்குக் குந்தகம் விளைவியாதது மட்டுமல்ல, அவர்களது பண்பாட்டையும், திறமையையும் புனிதப்படுத்தி கிறிஸ்துவில் பூரணத்துவம் பெறச்செய்கிறது.

கிறிஸ்துநாதர் திருச்சபையில் பிரசன்னமாயிருப்பதால் அதுவே மீட்பின் இணையற்ற வழியாகும். எனவே கிறிஸ்துநாதரால் இது அவசியமா[illegible]தை உணர[illegible]பவனுக்கு மீட்பு இல்லை. ஆனால் அறியாமையின் காரணமாக திருச்சபைக்கு வெளியே இருப்பவர்கள் தமது மனச்சாட்சியின்படி தேவனது சித்தத்தை நிறைவேற்ற முயன்றால் அவர்களுக்கும் மீட்புண்டு.

எல்லாவுயிர்கட்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்குமாறு கிறிஸ்துநாதர் கட்டளையிட்டிருப்பதாலும் தூய ஆவியானவரின் தூண்டுதலாலும் திருச்சபை வேதபோதக அலுவலில் ஈடுபடுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் அனைவருக்கும் இக்கடமை உண்டு. முழுஉலகும் ஒரே தேவமக்களாக ஐக்கியமாகும் நாளை எதிர்நோக்கி திருச்சபை பாடுபட்டும் செபம் செய்தும் வருகிறது.

திருச்சபை முழுவதும் ஒரே தேவமக்களாகையால் அதன் குருக்களும் பொதுநிலையினரும் முழுக்குடும்பத்தின் வளர்ச்சிக்காகவும் ஒன்றித்து உழைக்க வேண்டியவர்களாகின்றனர். திருச்சபையின் வேதபோதகத் [illegible] பங்குபற்றுவது [illegible] கடமையுமாகும்.

## "மழை பெய்தது நிலம் வரண்டது"

(பி. சவரிமுத்து)

இத்தலையங்கத்தை வாசித்ததும் அநேக மக்கள் ஆச்சரியப்படுவது உண்மையே. என்றாலும் கிறீஸ்தவர்களாகிய எங்களின் வாழ்க்கையை—ஞானவாழ்க்கையை நாம் உற்றுநோக்கின் இத்தலையங்கத்தின் உண்மையை உய்த்துணரக்கூடியதாயிருக்கும்.

நாங்கள் அநுதினமும் தேவனுடைய திருவருளை ஏராளமாகப்பெற்று வாழ்கிறோம். மெய். ஆனால், எங்களுடைய ஞான வளர்ச்சியை அவதானித்துப் பார்த்தால் நிலம் வரண்டமாதிரியே அது காட்சியளிக்கிறது. விசேஷமாக இந்த நாட்களில் அநேக தேவாலயங்களிலும், பங்குக் கோவில்களிலும் ஞானஒடுக்கப் பிரசங்கங்கள் போதிக்கப்படுகின்றன. அநேக விசுவாசிகளும் இப்பிரசங்கங்களைக் கேட்டுத் தமது ஞான வாழ்க்கையைத் திருத்தியமைக்க எத்தனிக்கின்றனர்.

ஞானஒடுக்கப் பிரசங்கிகளாக நியமிக்கப்பட்ட பக்திவாய்ந்த குருக்களும், தங்கள் சமய அறிவு, உலக அனுபவம், பேச்சுவன்மை ஆதியவற்றின் உதவியோடு அருமையான பிரசங்கங்களை அரும்பாடுபட்டுப் போதிக்கின்றனர். மழைமாரி போன்ற மறைப் போதனைகளை அள்ளி மக்கள்முன்—இல்லை மக்கள்மேல் பொழிகின்றனர். இப்போதனைகளைக் கேட்டு மனம் மாறாத மக்களுமுண்டோ? இக்குரவர்கள் ஒரு வாரத்தில் மக்களுக்குப் போதிக்கும் பதினைந்து பிரசங்கங்களில் ஐந்தை மாத்திரம் உற்றுக்கேட்டு அவற்றிற்கியைய வாழ்ந்தால், இரட்சணியம் நிச்சயமானதன்றோ! உதாரணமாக: "மனுக்குலத்தின் சிருஷ்டிப்பு", "பரமதந்தை எங்கள் தந்தை", "பாவத்தால் வரும் கேடு", "எமது இரட்சகரின் பாடுகளும், மரணமும்", "தேவதாய் எமது தாய்" என்பன போன்ற பிரசங்கங்களைக் காதாரக் கேட்டு, மனதார உணர்ந்து நாம் வாழ்வோமாகில் நாம பரிசுத்தராவோமன்றோ?

இது இவ்வாறிருக்க உலகில் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில், நாம் காண்பதுதான் என்ன? எங்கள் மனமாற்றங்கள் யாவும் சொற்பகாலத்துக்கே இடம் பெறுகின்றன. மழை பெய்ததும் நிலம் ஈரமாகின்றது. ஆனால், வெப்பத்தின் கொடுமையால் மீண்டும் நிலம் வரட்சி அடைகிறது. அதுபோலவே எங்கள் இருதயங்களும (தபசுகால) ஞானஒடுக்கப் போதனைகளால் ஈரலிப்புடையனவாகக் காணப்படுகின்றன. ஆனால் காலகதியில் அவை வரட்சி அடைகின்றன. இச்சந்தர்ப்பத்தில் எமது திருமீட்பராகிய யேசுக்கிறிஸ்துநாதர் கூறிய உவமை (லூக். 8 வச. 5—15) எமது ஞாபகத்துக்கு வருகிறது. "விதைக்கிறவன் ஒருவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கிறபோது சில விதை பாதை ஓரத்தில் விழுந்து மிதிபட்டது ஆகாயத்துப் பறவைகள் அதைப் பட்சித்துப் போட்டன. சில கற்பாறையின்மேல் விழுந்து முளைத்தது. ஆயினும், அதற்கு ஈரம் இல்லாததினாலே காய்ந்துபோயிற்று. வேறு சில முள்ளுகள் நடுவில் விழுந்தது; ஆனால், முள்ளுகளும் கூட எழும்பி, அதை அமுக்கிப் போட்டன. வேறு சில நல்ல நிலத்தில் விழுந்தது. அது முளைத்து, நூறு மடங்காகப் பலனைத் தந்தது".

மேலும் கல்வியறிவற்ற தமது சீஷர்களுக்கு இவ்வுவமையின் விளக்கத்தையும் எமது திருமீட்பர் கொடுத்தார். "விதை சர்வேசுரனுடைய வாக்கியம். பாதை ஓரத்தில் விதைக்கப் பெற்றவர்கள், வாக்கியத்தைக் கேட்கிறவர்களாம். பின்பு அவர்கள் விசுவசித்து, இரட்சணியம் அடையாதபடிக்குப் பசாசு வந்து, அவர்களுடைய இருதயத்தினின்று வாக்கியத்தைப் பறித்துக் கொள்ளுகிறது. கற்பாறையின்மேல் விதைக்கப்பெற்றவர்கள் வாக்கியத்தைக் கேட்கும்போது சந்தோஷத்தோடு அதை அங்கீகரிக்கிறவர்களாம். ஆனால் அவர்கள் வேரில்லாதவர்களாய், தற்காலத்துக்கு விசுவசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப் போகிறார்கள். முள்ளுக்கள் நடுவில் விதைக்கப்பெற்றது வாக்கியத்தைக் கேட்கிறவர்கள் தான். ஆயினும், அவர்கள் போய்க் கவலைகளாலும் ஐசுவரியங்களாலும் உலக வாழ்வின் இன்பசுகங்களாலும் அமுக்கப்பட்டுப் பலன்கொடாது இருக்கிறார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப் பெற்றதோ நல்லதும், உத்தமுமான இருதயத்தோடு, வாக்கியத்தைக் கேட்டு, அதைக் காப்பாற்றிப் பொறுமையால் பலன் கொடுக்கிறவர்களாம். எமதாண்டவர்தாமே போதனைகளைக் கேட்கும் மக்களை நாலு பெரும் பிரிவினராகப் பிரித்திருக்கிறார்.

(a) பாதை ஓரத்தில் விதைக்கப் பெற்றவர்கள், (b) கற்பாறையின்மேல் விதைக்கப்பெற்றவர்கள், (c) முள்ளுக்கள் நடுவில் விதைக்கப்பெற்றவர்கள், (d) நல்ல நிலத்தில் விதைக்கப்பெற்றவர்கள்.

விசேஷமாகத் தபசுகாலத்தின் இறுதிநாட்களாகிய இந்நாட்களில் நாம் ஒவ்வொருவரும் மேலே கூறப்பட்ட எந்தக் குழுவைச் சார்ந்தனராக நாம் வாழ்கிறோமென்று ஆலோசிப்பது மிகவும் பயனுடைத்து. இரட்சணியத்துக்கு ஏதுவானதுமாயிருக்கிறது. நாம் கேட்கும் அரிய பெரிய பிரசங்கங்களும், போதனைகளும் எங்களை எத்தன்மையராக்குகிறது என்று சிந்திப்பது சிறப்புடையது. நாம் இவ்வுலகில் சீவிக்கும்போது பசாசு, பாவச்சோதனை, மண்ஆசை, பொன்ஆசை, சிற்றின்ப ஆசை என்பன எம்மை எந்நேரமும் சூழ்ந்தே இருக்கும். அவை இன்றிச் சீவிக்க முடியாது அவ்வாறு எவரும் (எமது திருமீட்பரும், அவரது திருத்தாயாரும் உட்பட) சீவித்தது

[தொடர்ச்சி 5ஆம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

அன்புடை நேயர்களே!.... அனைவோர்க்கும் மங்களகரமான ஈஸ்டர் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

"இறைவன் எமக்காய்ப் பாடுபட்டார்
இன்னுயிர் தந்தே எமைமீட்டார்!...
இதனை நினைவோம் இவ்வாரம்
இயைந்தே செல்வோம் அவர்பாதம்!...

குருத்தோலையுடனே யேசுவைநாம்
கூட்டிச் செல்வோம் ஆர்ப்பரித்தே!...
இராப்போசன நல் விருந்ததனை
இன்புடன் சுவைத்தே அகமகிழ்வோம்!...

ஜெத்சமெனியின் வேதனையில்
யேசுவுடன் நாம்பங்கு கொள்வோம்! ..
பெரிய வியாழன் இரவெல்லாம்
தேறுதல் சொல்லி ஆற்றிடுவோம்!...

கல்வாரி நோக்கும் கர்த்தரைநாம்
கன்னிகை மரியுடன் பின்செல்வோம்!...
சிலுவையடியில் நின்றிடுவோம்
செய்பவம் பொறுக்க வேண்டிடுவோம்!...

பாஸ்கா விழிப்பில் பங்குகொண்டே
பரமன் உயிர்ப்பில் மகிழ்ந்திடுவோம்!..."

—ரோஜா

# ஆலயமொன்றினுள் ஒருமணிநேரம்!

(ஊர்க்குருவியின் செய்திச்சுருள்)

கீச்!... கீச்! கீச்!...

ஹலோ! ஊர்க்குருவியா? அடேயப்பா! எங்கே போயிருந்தாய் இத்தனை நாளும் என்கிறீர்களா? ஆமாம்! அன்றொருநாள் உல்லாசமாகப் பறந்து கொண்டிருந்தவேளை மரக்கொப்பொன்று தலையிலடித்துவிட்டது பாருங்கள். ஒருமாதம் "சிக்லீவ்" போடவேண்டி நேரிட்டுவிட்டது. இதனாலே வெளியூர் "டிரிப்" எல்லாம் 'கான்ஸல்' பண்ணிவிட்டு இப்படியே உள்ளூரில் சுற்றிக் கொண்டிருந்தேனா! அப்பப்பா? என்ன வெய்யில்! என்ன புழுக்கம்! தாங்க முடியாமல் தள்ளாடிக்கொண்டே நுழைந்தேன் எதிர்ப்பட்ட ஆலயமொன்றினுள்.

யாழ்நகரின் பிரபல ஆலயங்களுள் அதுவுமொன்று. நான்மட்டுமா தள்ளாடித் தவித்துப்போய்க் கஷ்டப்பட்டேன்? இல்லையே! அங்கே தள்ளாடுந் தயாபரனின் பரிதாபக் காட்சியொன்றைக் கண்டேன். பீடத்தின் மேலே கல்வாரிப் பாதை. காலை இடறச்செய்யும் கருங்கற்கள். அப்பாதையிலே அன்பர் யேசுவின் அவலநிலை. பாரச் சிலுவையுடன் இதோ தரையில் விழப்போகின்ற நிலையில் தள்ளாடுகின்றார். நீட்டியகரங்கள் நிலத்தைத் தழுவுமா? இல்லை! அங்கு நடைபெறும் மகா ஞானொடுக்கத்தில் மனந்திரும்பித் தன்னண்டை ஓடிவரும் பாவிகளை அரவணைக்க அவர்கள் இடமளிப்பதால் தடுத்து நிறுத்தப்படுமா? என்றகேள்வி எழுந்தது என்னுள். சிவப்புச் சகலாத்து! சிதறியதலைமயிர்மேல் ஊடுருவும் முள்முடி! கழுத்தில் கட்டிக் கள்வனைப்போலத் தோற்றமளிக்க வைக்கும் நீண்டகயிறு! பார்த்துக் கொண்டேயிருந்தேன். மெய்சிலிர்த்தது. அன்பர் யேசுவின் வதனத்தை அண்மையில் பார்ப்போம் என்று பறந்து சென்றேன் பீடத்தண்டை. பூட்டப்பட்டிருந்த "லைற்றை" மெதுவாகத் தட்டிவிட்டேனா! அந்தஒளியில்... ஆ பரிதாபமே! சம்மனசுகள் பார்த்துக் கிடுநடுங்கும் ஒளிவீசும் அற்புதனின் மங்கிப்போன சாயலைக்கண்டு மனங் கசிந்தேன். துயரம் பொங்கியது. "கீச்! கீச்!" என்றேன்.

வந்துவிட்டார் கட்டளைச் சுவாமியார். ஏய்! நீ யார்! பூசை தொடங்கப் போகின்றது. பீடத்தண்டையில் உன் சேட்டையெல்லாம் பலிக்காது. வெளியே! என்று கையை நீட்டினார். "ஓய் சாமியாரே! பாப்பாண்டவரே என்னைக்கண்டால் "லங்கா பியூட்டி" என்று ஆசையாக அழைக்கிறார். நீர் என்னடாவென்றால்!"...என்று முணுமுணுத்துக்கொண்டே பறந்தேன், ஜன்னலோரமாக உட்கார்ந்தேன். தள்ளாடுந் தற்பரனைப் பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும்போல இருந்ததே. எப்படி வெளியே வரமுடியும்? அன்பர் யேசுவுக்கு "ஏன் இந்தக் கோலம்" என்று என்மனதில் வினாஎழுந்ததோ என்னமோ! அடுத்தகணம் பாடகர்களின் வாயிலுமிருந்து "ஏன் இந்தக் கோலம் உமக்கு!" என்றகீதம் எழுந்தது. ஆலயத்தில் பூசைப்பலிகண்ட அத்தனைபோது மனமும் உருகின. உருகிய மனங்கள் சிலுவைநாதருக்கே தம்மை அர்ப்பணிக்கத் தயாராயிருந்த அடுத்த நிமிடமே,

"ஆண்டவரே எடுத்துக்கொள்ளும்
— எனக்குள்ள யாவற்றையும்
அன்பும் அருளும் அளித்தருளும்
இதுவே போதும்! வேறொன்றுமே
வேண்டாம்!.....

என்ற இன்னிசை அவர்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்தன. "அடே! பலே ஜோராயிருக்கே! பலிபூசையும், பாடல்களும் பக்தியை அருட்டுகின்றனவே" என எண்ணிக்கொண்டே சுற்றிவர நோட்டம்விட்டேன். அன்பர்யேசுவைத் தம் இதயங்களில் வரவழைக்க ஆயத்தமான ஆன்மாக்களின் ஆசை மற்றொரு பாடலாக வெளிவந்தது.

"இனிய யேசுவே! இதயம் வருவீரே!
தனியே பேசவே என் மனமே
நாடுதே!".... ஆ!...

என்ன இன்பம்! இதயத்தில் அன்பரை வரவேற்றதும் அவருடன் தனிமையில் இன்பமாகச் சல்லாபிக்க எண்ணியவர்களின் ஆன்மாக்களில் இன்பம் பொங்கியது. அக்களிப்புடன் நற்கருணை விருந்தைச் சுவைத்துவிட்டு இறைவனு[illegible] கூறுவதை[illegible]

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# கனவா!.... நனவா!....

அன்று பகல் இரண்டு மணி இருக்கும். மொனிக்கா அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தாள். அடிக்கொருதரம் அறைக்குள்ளே ஓடுவாள். எலும்புந் தோலுமாய் கட்டிலில் கடுஞ்சுரமாய்க் கிடந்த ரூபனின் நெற்றியில் கைவைத்துப் பார்ப்பாள். திரும்பவும் வாராந்தாவில் ஓடிச்சென்று சாளரத்தினூடாக வீதியை எட்டிப் பார்ப்பாள். அவள் கண்கள் தேடும் உருவம் ஏனோ அங்கே தென்படாது. "இறைவா!...என் கணவன் யூதாவை இன்னமும் காணோமே. பன்னிரண்டு மணி வேளையில் சென்றவராச்சே!...என்று வாய்விட்டுக்கூறி அங்கலாய்ப்பாள்.

ரூபன், யூதா மொனிக்கா தம்பதிகளின் ஏகபுதல்வன். வளர்பிறையன்ன அழகுத் தோற்றமாக வளர்ந்து அவர்கள் ஆசைக் கனவுகளுக்கு உருவம் கொடுத்த ரூபன் கடந்த ஒருவாரமாகப் பாயும் படுக்கையுமாகக் கிடக்கின்றான், வைத்தியர்கள் பலர் கைவிட்டுவிட்டனர். சிறந்த மருத்துவ நிபுணர் ஒருவர் கடைசிமருந்தாக ஒரு குறிப்பிட்ட மூலிகையின் வேரின் சாற்றைப் பிழிந்து கொடுக்கும்படி கூறிவிட்டுச் சென்றார். எனவேதான் அந்த மூலிகையைத் தேடிவந்து ஊசலாடும் உயிரை நிலைநிறுத்தச் சென்றிருந்தான் அவன் அருமைத்தந்தை யூதா. 'பாவம்!......எங்கெங்கே அலைகின்றாரோ!...மத்தியான வெயில் மகா கடூரமாய்க் கொதிக்கின்றதே!...மூலிகை கிடையாமல் போய்விடுமோ!......என் செல்வனை நான் இழந்துவிடுவேனோ!..."என்று விம்மியபடியே கண்ணீரும் கம்பலையுமாய் வாயிலுக்கும் அறைக்குமாக அலைகின்றாள் அப்பேதைப்பெண்.

திடீரென கதவில் "டக், டக்"என தட்டும் ஒலிகேட்டது. 'யூதா தான் வந்துவிட்டார் போலும்' என எண்ணியவாறே ஓடிச்சென்று தாழ்ப்பாளை நீக்கினாள் மொனிக்கா. ஆனால் அங்கே எதிர்பாராத மூன்று பெண்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் யாரென்பதை அவள் அறியமாட்டாள். வேதனையின் பெருக்கத்தில் வாடிவதங்கிய மலராக நின்றுகொண்டிருந்த மாதொருத்தியை இளம்பெண்களிருவர் அக்கமும் பக்கமும தாங்கிப் பிடித்திருந்தனர். அந்தப் பெண்ணின் முகத்திலோ எல்லையில்லாத வியாகுலம். என்றாலும் ஏதோ ஓர் அமைதியும் அவள் வதனத்தில் குடிகொண்டிருந்தது. "அம்மா!...மன்னியுங்கள் இப்பெண்மணி தாங்கொணா வியாகுலத்தினால் அறிவுமயங்கும் நிலையில் அங்கலாய்க்கின்றாள். ஒரு சிறிதுவேளை இங்கே இளைப்பாறிச்செல்ல இடமளிப்பீர்களானால் நாம் ரொம்ப நன்றியுள்ளவர்களாயிருப்போம்!....என்றாள் மதலேனாள். அப்பெண்மணியின் நிலை கண்டு மொனிக்கா மனம்கலங்கினாள். அவள் அமருவதற்கு சாய்வுநாற்காலியொன்றைக்காட்டினாள். உள்ளே ஓடிச்சென்று அரைவிநாடியில் சூடானபானமொன்று தயாரித்து வந்து கொடுத்தாள். அப்பெண்மணியுடன் கூடவந்த மற்றொருத்தி றெபேக்கா, அப்பானத்தை அக்கறையாக ஊட்டினாள் மரியன்னைக்கு. "அம்மா!... உங்கட்கு என்ன கஷ்டம் நேர்ந்தது?" ...என மரியன்னையிடம் ஆவல் மிக்கூர வினவினாள் மொனிக்கா. விடை சொல்ல முடியவில்லை மரியன்னையால். "நர் மரியன்னையின் ஏகமைந்தனைக் கொலைசெய்யக் கொண்டுபோகின்றார்கள் சிலுவை சுமத்தி. அவர் படும் வேதனையோ கொடிது. அதைக்காண எங்களாலேயே தாங்கமுடியவில்லை. தாயுள்ளத்தின்நிலை எப்படியிருக்குமம்மா?... என்று கூறினாள் மதலேனாள். தன் மைந்தனை இழக்கும் நிலையிலிருக்கும் மொனிக்கா அவள் துயரைப் புரிந்துகொண்டாள். "அம்மா மரியன்னை[illegible]... அதோ அந்த அறையில் பாருங்கள். ஜீவ மரணப்போராட்டத்தில் இருக்கின்றான் என் ஏக செல்வன் ரூபன். உங்கள் மனத்துயரை என்னாலும் புரியமுடிகின்றது. என் அருமைச் செல்வத்தைப் பறிகொடுத்து விடுவேனோ என்று நானும் தவித்துக் கொண்டிருக்கின்றேன்" என்றாள் மொனிக்கா. தன் துயரின் கொடுமையிலும் மரியன்னை மொனிக்காவை நோக்கினாள். "கவலைப்படாதே!...உன் புதல்வன் நலம்பெற இறைவனை வேண்டுவேன்" என்று கூறியவள தன்னுடன் வந்த பெண்களை நோக்கினாள். "மதலேன்!. றெபேக்கா!......என் மைந்தனை அவரது ஆன்மீக ஈடேற்ற பாதையிலே கல்வாரிமலைவரை நானும் பின்தொடர்ந்தேயாக வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள். மொனிக்காவின் ஆதரவுக்கு நன்றிகூறிவிட்டு மூவரும் வெளியேறினர்.

அவர்கள் போய் சிறிது நிமிடங்கள் ஓடின. மொனிக்கா வெளியே ஆரவாரம் கேட்டு சாளரத்தின் ஊடாக எட்டிப்பார்த்தாள் — அதோ ரோமானிய படைகள் என்ற புலிக்குழாத்தின் நடுவே முகரூபமே தெரியாதநிலையில் ஒரு செம்மறிப்புருவை மேனிமுழுவதும் இரத்தவாறாக சிலுவையின் பாரத்தால் தள்ளாடுகின்றது. "ஓ!...இவர் தான் அந்த மரியன்னையின் புதல்வனோ!"......ஆவலுடன் நோக்கினாள். தளர்நடைபோட்ட யேசு பாரச்சிலுவையின்கீழ் விழுகின்றார். எங்கிருந்தோ ஒருவன் ஓடிவருகின்றான், அணைத்து அவரை நிமிர்த்த முயல்கிறான்; அவன் மேல் சாட்டையொன்றைச் சுழற்றி வீசுகின்றான் போர்வீரனொருவன். உதவிக்கு வந்தவன் கைகளிலிருந்த சில மூலிகைத்தண்டுகள் சிதறுகின்றன. அவன் முகத்தில் சாட்டையடிபட்ட இடத்தில இரத்தக்காயம். அதோ மற்றொரு பெண்மணி!...யூதர்களின் குரூரத்தையும் பொருட்படுத்தாமல் துகிலொன்றினால் யேசுவின் முகத்தைத் துடைத்துக் களையாற்றுகிறாள். காட்சி தெருவீதியின் மூலையில்போய் மறைகின்றது.

உள்ளே திரும்பிய மொனிக்கா சோர்வுடன் தன் மைந்தன் கட்டிலில் அமர்கின்றாள். அவள் மனமெல்லாம் யேசுவுக்காகவும் அவர் வியாகுலத்தாய்க்காகவும் அங்கலாய்ப்புறுகின்றது. இதோ காலடியோசை...யூதா நுழைகிறான் உள்ளே!...அவன் முகத்தில் சாட்டையடியின்வடு... "மொனிக்கா!...அந்த மனிதன் பாவம்...அவர் தான் மெசாயா என்றும் பேசிக்கொள்கின்றார்கள். அவருக்கு உதவப்போனேன். பாடுபட்டுத்தேடிய மூலிகைகளையும் இழந்துவிட்டேன்"...அவன் வாய் முணுமுணுக்கின்றது.

மௌனத்தில் சில நிமிஷங்கள் கழிகின்றன. திடீரென்று ஒருமின்னல் ...பெரியதோர் இடிமுழக்கம்.... பூமி அதிர்ந்து நடுங்குகின்றது....எங்கும் இருள் சூழ்கின்றது...... பயந்துபோன மொனிக்கா கணவன் பக்கலில் ஓடி அவன்மேல் சாய்கின்றாள். "மாசற்றவரைக் கொலை செய்கின்றார்கள்... இயற்கையே அத்தாட்சி பகர்கின்றது போலும்" என்கின்றான் யூதா. சிறிது நேரம் கழிந்ததும் எங்கும் அமைதி. அதிர்ச்சி நீங்கிட தம்பதிகளிடம், எழுந்தோடி வருகின்றான் ரூபன் "அம்மா!..அப்பா!...அழகான கனவொன்று கண்டேன். சிலுவை சுமந்து சென்ற ஒருவரைப் பின்தொடர்ந்து சென்றேன். பெண்மணியொருத்தி ஓடிவந்து அவரிடம் ஏதோ சொன்னாள். ரூபனே!...நீ உன் அம்மா அப்பாவிடம் போ!....என்று அவர் கட்டளையிட்டார். விழித்துப்பார்த்தேன். என் தேக வருத்தமெல்லாம் தீர்ந்துவிட்டது. பார்த்தீர்களா!..... என்கின்றான். கண்களில் நீர்வடிய முழந்தாளிட்ட யூதா தம்பதிகள் "அவரே மெசாயா! ஆண்டவனே! ...உம்மை வாழ்த்துகிறோம்" எனக் கூறிச் சிரந்தாழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின்

## ஆசனக்கோவிலில் நிறைவேற்றப்படும்

# பரிசுத்தவாரத் திருச்சடங்குகள்



**7-4-68 குருத்தோலை ஞாயிறு**

காலை 6-30 குருத்தோலைப் பவனியும், மேற்றிராணியாரின் பூசையும்.

**11-4-68 பெரிய வியாழன் :**

காலை 6-30 மேற்றிராணியாரின் பரிசுத்த தைலங்கள் ஆசீர்வதிக்கும் பூசை.

மாலை 5-30 மேற்றிராணியாரின் இராப்போசன ஞாபக பாடற்பூசை.

இரவு 11-00 திருமணித்தியாலம்.

**12-4-68 பெரிய வெள்ளி**

மாலை 5-00 ஆண்டவருடைய திருப்பாடுகளினதும், மரணத்தினதும் திருச்சடங்குகள் மேற்றிராணியாரால் நிறைவேற்றப்படும். பின்னர் சிலுவைப்பாதையும், சிலுவை முத்திசெய்தலும்.

**13-4-68 பெரிய சனி :**

காலை 6-30 பரிசுத்த தேவதாயாரின் ஏழு வியாகுலங்களைப் பற்றிய தியானம்.

இரவு 11-00 பாஸ்காவிழிப்புத் திருச்சடங்குகளும், மேற்றிராணியாரின் பெரிய பாடற்பூசையும்.

**14-4-68 பாஸ்கு ஞாயிறு :**

காலை 5-30 முதற்பூசை. 6-30 இரண்டாம் பூசை (பாடற்பூசை). 7-30 மூன்றும் பூசை.

மாலை 5-00 முதற்பூசை. 6-00 இரண்டாம் பூசை.

"உயிர்ப்பும், உயிரும் நானே ; என்னில் விசுவாசம்கொள்பவன் இறப்பினும் வாழ்வான். உயிர்பெற்று என்னில் விசுவாசம்கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான்."

(அரு. 11: 25, 26.)

**நல்ல ஞானஒடுக்கம் செய்திருக்கிற நாங்களெல்லோரும் பரிசுத்தவாரச் சடங்குகளில் பக்தியோடும், புத்தியோடும் பங்குபற்றிப் பலனடையப் பிரயாசைப் படுவோமாக!**

கட்டளைக்குரவர்.

# உனக்குநான் என்னசெய்தேன் ?

( A. W. அரியநாயகம் )

முள்ளையே முடியாய்த் தந்தாய்
    மூங்கிலைக் (செங்)கோலாய்த் தந்தாய்
கள்ளனைப் போன்று என்னைக்
    கற்றூணில் கட்டி வைத்தாய்
எள்ளியே நகையுமாடி எனக்குநீ
    எத்தனை துன்பம் செய்தாய்
உள்ளத்தைத் தொட்டுச் சொல்லு
    உனக்கு நான்என்ன செய்தேன் ?

பாவத்தை பாரமாக்கி பாரச்சிலுவையை
    என்மேல் ஏற்றி நானும்
காலமெலாம் சுமக்க நீயும்
    காலனாய் வந்து நின்றாய்
தாகமாய் இருக்கு தென்றேன்புளிக்
    காடியைப் பருகத் தந்தாய்நான்
ஆத்மதாகமாய் இருப்பதை நீதான்
    அறியவே இல்லைப் போலும் ?

# நற்சிந்தனைகள்

— அ. ராஜ், O. M. I· —

இந்தத் தபசு காலத்தில் நாம் வாழ்வில் இன்பத்தை அனுபவிக்கச் சில உண்மையான உகந்த வழிகளைக் கடைப்பிடிப்போமாக.

## அயலானை நேசிக்க

1, உன்வார்த்தை பிறருக்குத் துன்பத்தை வருவிக்குமாகில் ... அங்கே **"மௌனம்"**
2. உன் அயலார் உன்னைத் தூற்றுவார்களாகில்... அங்கே **"பொறுமை"**
3. ஆவலாதிச் சம்பாஷணைகளில்... **"செவிடன்"**
4. அயலார் துன்பமனுபவித்தால்... அங்கே **"சேவை"**
5. துன்பதுரிதங்கள் உன்னைச் சூழ்ந்தால்... அங்கே **"தைரியம்"**

"மற்றவர்களிலும் கீழ்ப்பட்டவனென்று எண்ணினால் தாழ்மையாய் நிலைத்திருப்பாய்."

# அன்பே! எம் ஆருயிரே!

அன்பே! எம்ஆருயிரே! அருளின் தேவா!
    அவனிதனை மீட்கவந்த அமலநாதா!
என்புருக அடிபட்டு இரத்தம் பீற
    இருவிழிகள் செருகஉடல் பதைத்துவாட
வன்கண்ணர் இரக்கமின்றி வருத்த மாதா
    வருந்திஅழ வலுவிழந்து வாதைமீற ;
துன்பமெல்லாம் சூழ உயிர் துடிதுடிக்க
    துஷ்டர்செய்யும் கொடுமை ஏற்றீர் தூயதேவா!

திருவதனம் ஒளியிழக்கத் தென்பு குன்ற
    தீயர்இட்ட முடிமுள்ளு வாதைசெய்ய ;
கருகிடவே திருமேனி, கரமும் காலும்
    கடுகடுக்க இருப்பாணி தன்னில் தொங்கி ;
பருகிடவே கொடியர் தந்த பிச்சுக்காடி
    பரிவுடனே நீர்ஏற்றீர், பாவம்தீர்த்தீர் ;
ஒருபிழையும் அறியாத தேவ தேவா!
    உம்மைமுழுதும் எமக்களித்தீர், உயிரைஈந்தீர்.

வசைஏற்றீர் தீயர் சொன்ன வம்புஏற்றீர்!
    வாய்திறந்துபேசாது பொறுமை கொண்டீர்!
தசைபிரிய அடித்திடவும் தவித்து வீழத்
    தள்ளிஉம்மைக் கொடுமைசெய்யப் பொறுத்துத்தே
இசைவிதென்று நீர்நினைத்தீர் ; மீட்பின் தேவா!
    இன்முகத்தோடே சுமந்தீர் சிலுவை ; தேகம்
அசைவுகொண்டு துயர்மேவ, அதன்கீழ் வீழ்ந்தீர்
    ஆகடியம்எல்லாம் பொறுத்தீர் அவனிமீட்டீர் ;

ஆசிரியர், ச. அமிர்தநாதர்

# பாடுகளின் பாதையிலே!....

— சாமுவேல் பெனடிக்ற் —

தபசுக்காலத்தில் சிலுவைப்பாதை மிக முக்கியம்பெற்ற ஒரு பிரார்த்தனையாகும். நமதாண்டவரின் திருப்பாடுகளைத் தியானிக்கவும், அதே தருணத்தில் அதைப் பிரார்த்திப்பவர்கள் தங்கள் பாவங்கட்குப் பரிகாரம்செய்யும் சிறு தபமுயற்சியாகவும் சிலுவைப் பாதை விளங்குகிறது.

கிறிஸ்துநாதர் மனுக்குலத்தின்மேல் கொண்ட அன்பின் கனகனத்தையும், நமது பாவத்தின் கொடூரத்தால் அவருக்கேற்பட்ட விளைவுகளையும் நன்கு விளங்கிக்கொள்ளச் சிலுவைப்பாதை வழிவகுக்கிறது. சிலுவைப்பாதை செய்செய்வதில் சுருக்கமும் விரிவுமான பல முறைகள் கையாளப்படுகின்றன. மிகச் சுருக்கமாகக் கல்வாரியின் பாதையைத் தியானிக்க விரும்புபவர்கட்கு இதோ சில தியானங்கள்.

**முதலாம் ஸ்தலம் :** கிறிஸ்துநாதர் மரணதண்டனை விதிக்கப்படுகிறார்.

உண்மை எதுவெனில் எனது பாவங்களே கிறிஸ்துநாதருக்கு மரணதண்டனை யளித்தவை. அவர் நிரபராதி; நல்ல தேவனே, இனிமேலும் எனது பாவங்களால் உமக்குத் துன்பமளிக்காதிருக்கக் கிருபைசெய்யும்.

**இரண்டாம் ஸ்தலம் :** கிறிஸ்துநாதரின்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.

என்மேல்வைத்த மட்டற்ற அன்பினால் நமதாண்டவர் சிலுவையைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்கிறார். ஆண்டவரே, உமது மேல்வைக்கும் அன்பினால் எனக்கேற்படும் சிலுவை துன்பதுரிதங்களனைத்தையும் பொறுமையோடு ஏற்றுக்கொள்ள எனக்குதவி செய்தருளும்.

**மூன்றும் ஸ்தலம் :** கிறிஸ்துநாதர் முதலாம்விசை குப்புற விழுகிறார்.

எனது பாவங்களின் கனகனத்தைத் தாங்காததாலே நமதாண்டவர் விழுந்தார். இரக்கத்தின் பிதாவே, உமது அளவற்ற தயையின் மிகுதியால் மீண்டும் பாவச்சோதனைக்குள் விழாதபடிக்குத் தயைசெய்தருளும்.

**நான்காம் ஸ்தலம் :** கிறிஸ்துநாதர் தமதன்னையைத் தரிசிக்கிறார்.

ஓ! தேவகுமாரனே, உமது அன்பின் அன்னையை என்றென்றும் நேசிக்க எனக்கு உதவிசெய்தருளும். மரியன்னையே, உமது திருக்குமாரனின் திருப்பாடுகள் என்றும் என்மனதைவிட்டகலாதிருக்கக் கிருபைகூர்ந்தருளும்.

**ஐந்தாம் ஸ்தலம் :** கிறிஸ்துநாதருக்குச் சீமோன் உதவிசெய்கிறார்.

ஆண்டவரே, எனது சிலுவையாகிய கஷ்டங்களைப் பொறுமையோடு சுமந்துசெல்லவும், அயலாரின் துன்பதுரிதங்களில் அவர்கட்குதவவும் என்னை வழிநடாத்தியருளும்.

**ஆறும் ஸ்தலம் :** கிறிஸ்துநாதரின் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறாள்.

தமது திருமுகத்தை வெரோணிக்காளின் திருத்துகிலில் பதிக்கத் திருவுளமான யேசுவே, தமது பாடுகளின் கனகனம் என்றென்றும் எனதிதயத்தில் பதிந்திருக்கத் தயைசெய்தருளும்.

**ஏழாம் ஸ்தலம் :** கிறிஸ்துநாதர் இரண்டாவது தடவையாகச் சிலுவையோடு விழுகிறார்.

எனது பாவங்களின் பாரத்தால் கிறிஸ்துநாதர் எவ்வளவு வேதனைகளை அனுபவித்தாரென இந்நிழுகை எனக்குக் கற்பிக்கின்றது. பாவச்சோதனைகளில் மீண்டும்மீண்டும் விழாதிருக்க நல்லாயனே எனக்குத்துணைபுரிந்தருளும்.

**எட்டாம் ஸ்தலம் :** ஜெருசலேம் பெண்களைக் கிறிஸ்துநாதர் தேற்றுகிறார்.

கிறிஸ்துவின் துன்பங்கண்டு கதறியழுதனர் அந்தப் புண்ணியவதிகள். எனது பாவத்தின் கொடுமையை எண்ணியெண்ணிக் கதறியழ யேசுவே, எனக்குத் திடமளித்தருளும்.

**ஒன்பதாம் ஸ்தலம் :** கிறிஸ்துநாதர் மூன்றாவதுமுறை விழுகிறார்.

தாங்கமுடியாத களைப்பும் இளைப்பும் அவரை மீண்டும் விழச்செய்தன. என

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுவின் திருப்பாடுகளின் சித்திரம்

— எஸ். அரியரெத்தினம் —

### சித்திரவதை

பிணத்தினை வட்டமிடும் — கள்ளப்
பேய், நரி, கழுகுகள் கூட்டம்போல்
வனத்தினில் மான்களையே — சுற்றி
வளைத்திடும் வேட்டை நாய்களைப்போல்
மனத்தினில் மிருகங்களாய் — வாழும்
மனிதர்கள் ரத்த வெறிகொண்டு
கணத்திலே அவர் பாய்ந்தார் — தம்
கைவந்த இரைகண்டு கொக்கரித்தார்!

கற்றூணிற் கட்டியவர் — கொடும்
கசைகளால் அடித்துச் சதைகிழித்தார்
குற்றமே இல்லாதோன் — அந்தக்
குற்றுயிரான நிலையினிலும்
சற்றுமே ஒருவார்த்தை — அவர்க்குச்
சாற்றுது மௌனம் சாதிக்கவே
செற்றம் மிகக்கொண்டு — அந்தச்
செங்கண்ணர் மேலும் வதை செய்தார்!



முள்முடி தலைபதித்து — ஒரு
மூன்றுகால் இருக்கை அவர்க்களித்து
எள்ளிநகை செய்தே 'எங்கள்
இராசாவே' யென்று வலம்வந்தார்
உள்ளவர் எல்லோரும் — பின்
ஒரு தடியெடுத்துத் தலையடித்துக்
கள்ளமாய் 'ஆர்' என்றுர் — இப்படிக்
கயவர்கள் வாதனைபல செய்தார்!

காறிப்பலர் உமிழ்ந்தார் — இரு
கைகளும் வலிக்க அவர் அறைந்தார்
சீறிச் சிலர் எழுந்தார் — அந்தச்
செம்மறிக் குட்டியின் மேல்விழுந்தார்
நீறிப்பிளந்த கனிபோல் — அந்த
மேவர் கிறிஸ்துவின் உடலிழித்தார்
மாறி மாறி அவரை — இரு
மன்னவர் மன்றிற்குக் கட்டிழுத்தார்!

### சிலுவை சுமத்தல்

இடமிலை யெனும்படிக்கு — எங்கள்
யேசுவின் எழில்நிறை உடலெல்லாம்
கடையர்கள் புண்செய்தார் — அந்தக்
கருணையின் தெய்வத்தின் உருஅழித்தார்
திடமிகு சிலுவையினை — அவர்
திருத்தோளிற் சுமத்திக் கல்வாரிக்கு
'நட'என ஆணையிட்டார் — அந்த
நாய்களின் சொல்லுக்கு உடன்பணிந்தார்!

பலகாதம் அதைச் சுமந்து — களைத்துப்
பாதையில் மயங்கி வீழ்கையிலே
தலைமயிர் பிடித்துயர்த்திப் — பாரச்
சிலுவையைத் திரும்பவும் தோளேற்றி
கொலைகாரப் பாவிகள் — செய்த
கொடுமைகள் எல்லாம் பொறுத்துமேலே
சிலைபோல அவர் நடந்தார் — அந்தச்
சிறுத்தைகளெல்லாம் பின்தொடர்ந்தார்!

காய்ந்திடும் வெயிலினிலே — தன்
கண்மணி சிலுவை சுமத்தல் கண்டு
தாய்மரி புரண்டழுதாள் — துயர்
தரியாது தரையில் வீழ்ந்தழுதாள்
வாயினுற் சொல்ல ஒண்ணு! — அந்த
மாதாவின் துன்பம் பெருங்கடலே!
நேய அவள் மகனுரோ — இந்த
நிலைகண்டு நெடுமரமாகி நின்ருர்!



மங்கையர் திலகமாம் — தூய
வரோனிக்கம்மாளும் இதைப்பார்த்து
பொங்கிடும் துயர்கொண்டு — குருதி
பொழிந்திடும் சேசுவின் முகத்தினையே
பங்கமில்லாமலே — ஒரு
பரிசுத்த துணியாற் துடைத்திடவே
அங்கதிற் புதுமையாக — எங்கள்
அமலனின் திருமுகம் பதிந்ததுவே!

சிலுவையில் அறையும் முன்னே — தேவ
தேவனின் வஸ்திரந்தா னுரிந்தார்
'பொல பொல'வென இரத்தம் — தோலும்
புறப்பட்டதனேடு வந்திடவே
அனுகோசிக் கூட்டத்தார் — மேலும்
ஆடையைச் சுண்டிக் கிழிழுத்தார்
பலபல காயங்கள் — செம்
பவளங்கள் போலத் தெரிந்ததம்மா!

ஆணியின் குழிகளினை — எங்கள்
அமலனின் கைகள் எட்டாததால்
கோணிய முகமாகக் — கொடுங்
கொலைகளைச் செய்வதில் பேர்பெற்ருேர்
காணும் வரைக்குமவர் — இரு
கமக்கட்டுள் தமதுகால்கள் வைத்துக்
காணவே கண்கூசும்! — அய்யோ
கைகளைப் பிடித்துச் சுண்டிழுத்தார்!

கல்வாரி மலையினிலே — இரு
கள்வரினும் மகாகள்வனென்று
சொல்லவே உலகிற்கு — அந்தச்
சோரர்கள் மத்தியில் அவர் வைத்தார்
எல்லையில்லா அன்பால் — எங்கள்
சேசுவும் இந்தத் துன்பங்களைப்
பொல்லா எம்பாவத்தை — எண்ணிப்
பொறுத்தவர் மேலும் அருள்செய்தார்!

(வளரும்)

## அகில இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் துணையாக அவ்வப்படிகளில் இல்லறத்தோர், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள். குருமார் முதலியோர் அடங்கிய சினுெட் சபைகள் நியமிக்கப்படுகின்றன. இலங்கையில் இந்த சினுெட்சபை வருகிற ஆனிமாதம் தேசியரீதியில் கொழும்பில் கூட இருக்கின்றது. இந்த சினுெட் சபைக்கு ஆயத்தமாக வெவ்வேறு மேற்றிராசனங்களும் தத்தம் மாகாணரீதியில் கூடி தயார் செய்கின்னர்.

இந்தமாதம் காலி மேற்றிராசனத்தில் 24-ம்திகதி அம்மாகாணசினுெட் கூட்டப்பட்டு மூன்றுநாட்களாக அகிலஇலங்கை சினுெட் கூட்டத்துக்கு ஆம்மாலாகவேண்டிய ஆயத்தங்கள் ஆலோசிக்கப்படும். ஆலோசனைக்கு எடுக்கப்பட இருக்கும் கருமங்கள்; (1) மேற்றிராசனமும் விசாரணைப்பங்கு நிர்வாகமும். (2) இல்லறத்தவர் சமயத்தொண்டு. (3) திருச்சபை செய்யக்கூடிய சேவைகள். இக்கூட்டங்கள் காலி புனித அலோசியஸ் கல்லூரியிலும், திரு இருதய கன்னியர்மடத்திலும் நடைபெறும். இதில் மேற்றிராசனத்திலுள்ள குருமார். சந்நியாசசபைகளின் அதிபர்கள், உபஅதிபர்கள், குருமடஅதிபர்கள், விசாரணைப்பங்குகளின் பிரதிநிதிகள் முதலியோர் பங்குபெறுவர். மாணவ, மாணவிகளுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் அவர்களுடைய அறிவையும், அபிப்பிராயங்களையும் அறிவதற்காகக் கேள்விமடல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து தக்க நடைமுறைகள் எடுக்கப்படும். காலியில் நடைபெற இருக்கும் மாகாண சினுெட் கூட்டம் தேசியகூட்டத்தின் முன்னேடியே.

## கௌத்தமலாதேச ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குக்காக இவ்வாறு கலகக்காரர் செய்திருக்கலாம். அதிமேற்றிராணியார் அவர்கள் அப்பிரிவின் பாப்பரசரின் ஸ்தானிகருடன் தொடர்பு கொண்டிருப்பதாக பின்வந்தசெய்திகள் கூறுகின்றன—இரத்த அமுக்கக்கோளாறினல் பாதிக்கப்பட்டிருக்கும் இவர் அவ்வருத்தத்துக்குவேண்டிய குளிகைகளை அனுப்பிவைக்குமாறு பாப்பரசரின் ஸ்தானிகருக்கு அறிவித்திருக்கிருர்.

## வவுனியாவில் திருப்பாடுகளின் காட்சி

உள்ளத்தை உருக்கும் யேசுபெருமானின் திருப்பாடுகளின் காட்சி வவுனியா, அர்ச். அந்தோனியார்கோவில் மைதானத்தில் மிகஅழகாய் அமைத்த மேடையில் அவ்வூர் வாலிபர்களால் 1968ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7ஆம், 8ஆம் தேதிகளில் பி. ப. 6-45 மணியளவில் நடித்துக் காண்பிக்கப்படும்.

முல்லைத்தீவு, செட்டிகுள மக்களின் வசதிக்கேற்ப விசேஷ போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வருகையை வரவேற்கிறேம்.

காட்சி செயற்குழு
வவுனியா.

## யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களால் கல்லூரி மைதானத்தில் 1968ஆம் ஆண்டு சித்திரைமாதம் 5-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 6-30மணியளவில் யேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி நடித்துக் காண்பிக்கப்படும்-

போக்குவரத்து வசதிகள ஒழுங்குசெய்யப்படும்.

காட்சி நிர்வாகக் குழுவினர்,
50-68 புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

## காணி விற்பனவு

யாழ்ப்பாணம், கோவில்வீதி 32ஆம் இலக்கத்தில்உள்ள காணி $2\frac{3}{4}$லாச்சமும், $\frac{9}{16}$குளியும், அதில்உள்ள கல்வீடும், வீட்டுத் தளவாடங்களும் விற்பனைக்குள்ளது. வேண்டுவோர் விலையைக் குறிப்பிட்டுப் 10-5-68-க்குமுன் கிடைக்கக்கூடியதாகக் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**Mr. V. Benjamin**
No. 74, Vivekananda Hill,
Colombo —13.

Mr. & Mrs. P. M. Joseph
52-68

### நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். யூதாததேயுவினதும், அர்ச். அந்தோனியாரினதும் வேண்டுதலினல் இழந்தபொருள் கிடைக்கப்பெற்றமைக்கு நன்றிகூறி, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

ஓர் அடியாள்
53-68

## ஆலயமொன்றினுள்...

[மகளிர்மன்றத் தொடர்ச்சி]

ஞர்கள். அதற்கும் பதில்கிடைத்தது பாடகர் குழாமிலிருந்து.

"ஆண்டவர்க்குப் புகழுரைப்பேன்
அவர்நாமம் போற்றிசெய்வேன்"

என்று பெருக்கெடுத்தோடிய கானத்தில் நீந்தினர் எல்லோரும். மகிழ்ச்சியுடன் வீடுதிரும்பினர்.

இன்பமாகக்கழித்த அந்த ஒருமணி நேரத்திற்கும் யாருக்கு நன்றி கூறுவது? பறந்தேன் அறைவீட்டை நோக்கி. அவ்வாலயப் பணியிலீடுபட்ட சாமியார்களிருவருக்கும் போட்டேன் ஒரு கும்பிடு... "ரொம்ப நல்லாக உழைக்கிறீங்களே. கங்கிராச்சுலேஷன்ஸ்! ஆண்டவன் சம்பாவனை தருவார்" என்றேன். விரைந்தேன் என் கூடுநோக்கி. கீச்!... கீச்!... கீச்!

## மழை பெய்தது....

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

மில்லை. சீவிக்கப்போகிறதுமில்லை. ஆனல், அவற்றை மேற்கொண்டு சீவிப்பதே உத்தம சீவியமாயிருக்கிறது.

எனவே எமது கடமைதான் என்ன? நாம் கேட்கும் பிரசங்கங்களை நமது இருதயத்தில ஆழமாக இருத்தி, இத்தபசுகாலத்தில் மாத்திரமல்ல, நமது ஆயுள்காலம் முழுவதுமே நாம் ஒரு புனித வாழ்வை வாழ முயற்சிக்க வேண்டும். "கற்பவைகற்றுக் கற்றுங்கொழுகுக" என்ற பழமொழி ஒன்று தமிழுலகில் வழங்கிவருகிறது. அதைச் சற்று மாற்றிக் "கேட்பவை கேட்டுக் கேட்டாங் கொழுகுக" என்று நாம் விசேஷமாகக் கிறிஸ்தவ மக்கள் சகலருக்கும் புத்திமதி கூறமுடியும். அல்லாவிடில் இப்பிரசங்கங்களால் அவ்வரிய போதனைகளால் ஏற்பட்ட நயம் என்னவாயிருக்கும்?

"மழை பெய்தது; நிலம் வரண்டது" என்றே கூறவேண்டியிருக்கும்.

## பாடுகளின் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

து பாவச்சுமைகளின் பாரத்தால் அறநெறிப்பாதையில் நான் சோர்ந்து விழாதிருக்க இரக்கமுள்ள ஆண்டவரே எனக்குத் துணையாகவாரும்.

**பத்தாம் ஸ்தலம்:** கிறிஸ்துவின் உடைகள் களையப்படுகின்றன.

ஆடைகளின் அலங்கோலத்தால் பாவச் சோதனைகள் எனக்கு நேரிடாதிருக்க மரிமைந்தனே எனக்குக் கிருபை செய்தருளும்.

**பதினேராம் ஸ்தலம்:** கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்படுகிருர்.

தனது கரங்களை உயர்த்தித் தனது தேகத்தைச் சிலுவையுடன் பிணைக்கக் கிறிஸ்து பொறுமையுடன் உதவுகிருர். பொறுமையின் திருவுருவே, எனது இருதயத்தைத் தமது பாதங்களுடன் இணைத்தருளும். இல்லையேல் அது தமது வழியைவிட்டுத் தூரச்செல்ல நேர்ந்துவிடும்.

**பன்னிரண்டாம் ஸ்தலம்:** கிறிஸ்துநாதர் சிலுவையில் உயிர்விடுகிருர்.

தமது சிலுவையண்டை முழந்தாளிட்டுத் தமது பாதங்களை முத்தமிட்டு நல்லாயனே, தம்மிடம் நான் இரந்து கேட்பதென்னவெனில் என் மரணவேளையிலும் இவ்விதமே தமது பாதங்களை முத்தமிடக் கிருபைசெய்தருளும்.

**பதின்மூன்ரும் ஸ்தலம்:** சிலுவையினின்று கிறிஸ்துவின் சடலம் இறக்கப்படுகிறது.

தமது புதல்வனின் உயிரற்ற சடலத்தைச் சிலுவையினின்று பெற்றுக்கொண்ட வியாகுலத்தாயே, என்னை உமது புதல்வனுக ஏற்றுக்கொண்டு வழிநடாத்தியருளும்.

**பதினுன்காம் ஸ்தலம்:** கிறிஸ்துவின் சடலம் அடக்கம் செய்யப்படுகிறது.

புதைக்கப்பட்ட கிறிஸ்து மறுபடியும் உயிர்த்தெழுந்து மரணத்தை வெற்றிகொண்டார். பாவத்தால் மரித்த எனதாத்துமம் மீளவும் பாவசங்கீர்த்தனத்தால்உயிர்த்தெழ நல்லதேவனே, எனக்குதவியளித்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## விசேடபொலிஸ் பிரிவுகள்

யாழ்ப்பாணம், கண்டி, காலியாகிய மூன்றுநகரங்களிலும் அரசாங்க அதிபர்களின் அதிகாரத்தின்கீழ் விசேட பொலிஸ்பிரிவுகளை அமைக்கப் பொலிஸ் இன்பெக்றர்—ஜெனறல் முடிவுசெய்திருக்கின்றார். இந்தவிசேட பொலிஸ் பிரிவுகள் கொழும்புப்பொலிஸ் திடீர் சோதனைக்குழுவைப்போன்று கட்டுப்பாட்டு விலைத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள பொருட்களில்கொள்ளைலாபம் அடித்தல், அவற்றைப்பதுக்கல் முதலியவற்றில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கெதிராக உடன்நடவடிக்கை எடுத்துவரும்.

### கண்தானமும் கண்பார்வையும்

கணேமுல்லையைச்சேர்ந்த பாயிஸ் அப்புஹாமிஎன்பவரின் கண்களை அவரதுமைந்தன் ஜயவீர கண்டிஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச்செய்திருக்கின்றார். கண்டிப்பகுதியிலே கண்பார்வை இழந்திருந்த 83பேர் இதுவரை திரும்பவும் கண்பார்வை பெற்றிருக்கின்றனர். கம்பஹாவிலுள்ள கண்தானசங்கம் அனுப்பிவைத்த கண்கள்கொண்டுதான் இவர்கள் திரும்பக் கண்பார்வைபெற்றார்கள்

### புடவைக்கூப்பன் புள்ளிகள்

23-வது அரிசிப்பங்கீட்டுப் புத்தகத்தின் 97ஆம்இலக்கக்கூப்பனும், புடவையடையாள அட்டையின் 12ஆம் இலக்கத்துண்டும் இந்தச்சித்திரை 1ஆம்திகதிதொடக்கம் பாவனைக்குச் செல்லாதனவாகும். இவற்றிற்குப் பதில் அன்றுமுதல் அதேபங்கீட்டுப் புத்தகத்தின் 111ஆம்இலக்கக் கூப்பனும், அதேபுடவையடையாள அட்டையின் 15ஆம்இலக்கத்துண்டும் செல்லும்படியாக்கப் பட்டுள்ளன. மேலும் அதேஅரிசிப்பங்கீட்டுப்புத்தகத்தின் 106ஆம் 110ஆம் இலக்கக் கூப்பன்களும், அதேபுடவையடையாள அட்டையின் 13ஆம், 14ஆம் இலக்கத் துண்டுகளும் புடவைவாங்கத் தொடர்ந்துசெல்லும்.

### ஆசிரியரும் வருமானவரியும்

இத்தனைவருடகாலமும் வருமானவரிப்பகுதிக்கு வருமானவரி செலுத்தாமல் தப்பிவந்துள்ள அரசாங்கஆசிரியர்கள்மட்டிலே கடுமையான நடவடிக்கைஎடுக்க வருமானவரிக் கமிஷனர் முடிவுசெய்திருக்கின்றார். பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்பளவிபரங்களை இரண்டுவாரகாலத்திற்குள் அனுப்பிவைக்குமாறு கல்வி மந்திரிகாரியாலயத்தை வருமானவரிப் பகுதி கேட்டிருக்கிறது.

### கள்ளச்சந்தையில் 15ரூபா

புடவைக்கூப்பனுக்குக் கொடுபடும் ஜப்பான்மல்வேட்டி ஒன்றைக்கடந்தசில காலமாகக் கூட்டுறவுப் பண்டகசாலைகளிலோ அன்றேல் ஏனையவிற்பனையாளரிடமோ கூப்பன்கொடுத்து 7ரூபா 60சதத்துக்குப் பெறமுடியாதிருக்கிறது. ஆனல், ஜப்பான்மல் வேட்டி ஒன்று கள்ளச்சந்தையில் 15ரூபாவுக்குக்கிடைக்கிறது.

### புதியசுவீப் விற்பனை ஆரம்பம்

''தேசிய செல்வம்''என அறியப்படவிருக்கும் தேசியலொத்தர் சபையின் விசேடசுவீப்டிக்கெற் விற்பனையை இன்று6ஆம்திகதி சனிக்கிழமை காலை 9-30மணிக்குப் பிரதமர்டட்லி சேனநாயக்கா ''அலரிமாளிகை''யில் ஆரம்பித்துவைப்பார். இரண்டுரூபாவீதம் விற்கப்படும் இந்தச்சுவீப் டிக்கெற்றுகள்மூலமாகக் கிடைக்கின்றவருமானம் விவசாய வேலைகளுக்கும், அபிவிருத்தித்திட்டங்களுக்கும் முதலீடுசெய்ய உபயோகிக்கப்படும். இந்தச் சுவீப் இழுப்பில் முதல்பரிசாக இரண்டரை லட்சம்ரூபா வழங்கப்படும்.

### 100அடி ஆழத்தில் நிலக்கரி

சிலாபத்தைச் சேர்ந்த தெதுறு ஓயாப்பகுதியில் நிலஆராய்ச்சி நடத்திய நிலஆராய்ச்சிப் பகுதியினர் அங்கு வெலிமஸ்கடப் பகுதியில் நூறுஅடி ஆழம்வரை நிலத்தைத் தோண்டியபோது நிலக்கரி இருப்பதைக் கண்டுபிடித்திருக்கின்றனர். மேலும் ஆழமாகவெட்டினுல் பெருமளவிலே நிலக்கரி எடுக்கமுடியுமென அவர்கள் கருதுகின்றார்கள்.

### சைக்கிள் திருட்டுகள்

யாழ்ப்பாணத்திலே கடந்த ஐந்து மாதங்களிலும் 57சைக்கிள் களவுபோயிருக்கின்றன. இவைகள் பாடசாலை வளவுகளிலும், அரசாங்க காரியாலயங்களிலும், செயலகங்களிலும் களவுபோயிருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. அதனுல் இவ்விடங்களில் பொலிசார் காவலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

### கிருமிநாசனி பலிகொண்டது

ஈவினைவாசியான 25வயதுடைய இளையவி தேவராசா சென்றவியாழக்கிழமை தனதுதோட்டத்திலே பயிர்களுக்குக் கிருமிநாசினி தெளித்துக் கொண்டிருக்கையில் மயக்கமடைந்து அவ்விடத்திலேயே மரணமாயினுர். இதுபற்றிய விசாரணைமுடிவில் விபத்தினுல் ஏற்பட்ட மரணமென்று தீர்ப்பளிக்கப்பட்டது.

### வறியகுடும்பங்களுக்குக் காணிகள்

கரணவாய்தெற்கிலே குடியிருக்கச் சொந்தக்காணிகள் இல்லாதிருந்த 76 வறியகுடும்பங்களுக்கு அரசாங்கம் உப்புமால், தாழையடி எனுமிடங்களிலே 22காணித்துண்டுகளை அதிர்ஷ்டச்சீட்டிழுத்துப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டுபரப்புக் காணிவீதம் வழங்கப்பட்டுள்ளது.

### தொழிற்பயிற்சிக் கல்லூரி

கொழும்பிலே உருகொடவத்தையிலுள்ள தொழிற்பயிற்சிக் கல்லூரியை அனுசரணையாகக்கொண்டு யாழ்ப்பாணம், கண்டி, காலியாகிய மூன்று நகரங்களிலும் ஒவ்வொரு தொழிற் பயிற்சிக்கல்லூரி அமைக்கப்படவிருக்கிறது. கனிஷ்ட—சிரேஷ்ட கல்வித் தராதரமுள்ள வாலிபர்கள் இவற்றில் அனுமதிக்கப்பட்டு மோட்டார் எஞ்ஜினியறிங்வேலை, தச்சுவேலை, தகரவேலை, மெஷின்வேலைமுதலாம் பலவகைத் தொழில்களில் பயிற்சியளிக்கப்படுவார்கள். ஒவ்வோர் ஆறுமாதங்களுக்கும் ஒருமுறை இக்கல்லூரிகளிலிருந்து 150 பேர் பயிற்சிபெற்று வெளியேறுவார்கள். அரசாங்க துறையிலும், தனியார் துறையிலும் இவர்களுக்கு வேலை பெற்றுக் கொடுப்பதற்கான ஒருதிட்டத்தையும் தொழில்மந்திரி தயாரித்து வருகின்றார்.

### இரவில் திடீர்சோதனை

யாழ்ப்பாணப் பொலிசார் நடத்திய திடீர்சோதனையிலே வவனியாவைச் சேர்ந்த இரு சி. ஐ. டி. வாலிபர்கள் கைதுசெய்யப் பட்டதைத்தொடர்ந்து அவர்கள் இரவிலே சந்தேகத்துக்கிடமாகத் திரிகிறவர்களைக் கைதுசெய்வதிலும், வாகனங்களை நிறுத்திப்பரிசோதனை செய்வதிலும் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் இரவு 9மணிமுதல் காலை5மணிவரை சகல இடங்களிலும் சோதனை நடத்துகின்றார்கள். இராவேளைகளிலே அதிகரித்துவரும் களவு, காடைத்தனம் ஆகியவற்றை ஒழிப்பதே அவர்களின்நோக்கமாகும்.

## 75-ம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடும் கன்னிகாதாயார்

தென்னிந்தியாவிலே வியாகுல மாதா சபையைச்சேர்ந்த சங். மதர் செசிலிமேரிதாயார் இவ்வாரத்திலே தாம் கன்னிகாஅந்தஸ்தில் பிரவேசித்த 75ஆம்ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுகின்றார்.

காலிமேற்றிராசனத்திலே திருத்தொண்டாற்றி வருகிறவர்களான யேசுசபையைச்சேர்ந்த வண. பசில் கொறெரு, வண. பீற்றர் கோமெஸ் எனும் குருப்பிரசாதிகள் இருவரும் இவருக்குப் பேரப்பிள்ளைமுறையானவர்கள். இவர்களைத்தவிர இவருக்குப் பெருமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் முறையானேரும், மற்றும் உறவினருமாகப் பெருந்தொகையான சுற்றத்தவர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவருடைய மருமக்கள்முறையான மூன்று பெண்மணிகள் இவர்சேர்ந்துள்ள அதேசபையில் கன்னியாஸ்திரிகளாய் இருந்துவருகிறார்கள். மருமகள்முறையான மற்றொருவர் சென்னையிலே வறியவர்களின் சிறிய கன்னியர் சபையில் கன்னியாஸ்திரியாய் இருக்கின்றார்.

சங்.மதர் செசிலி மேரிதாயார் 1878-ம்ஆண்டு வைகாசிமாதம் 22-ந் தேதி பிறந்தார். அப்பொழுது இவர் செல்வி கத்தறீன் கோமெஸ்என அறியப்பெற்றிருந்தார். 1892ஆம் ஆண்டு இவர் கன்னிகாமடத்தில் சேர்ந்து, 1893ஆம் ஆண்டு சித்திரை 26ஆம் தேதியன்று முதல்வாக்குத்தத்தம் கொடுத்தார். அதன்மேல் தென்னிந்தியாவின் பல்வேறு இடங்களிலும் தொண்டாற்றித் தமது 90ஆம் வயதில் ஓய்வெடுத்துக்கொண்ட போதிலும் இன்றுமேகன்னிகாபதவிக்குரிய வழமையான தமது கடமைகளைச் சுமுத்திரையாக அனுசரித்துவருகின்றார். தமது கன்னிகா வாழ்க்கையின் 75ஆம்ஆண்டு நிறைவுவிழாவை மிகவும் அபூர்வமாகத் கண்டுகளிக்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்ட சங். தாயார்அவர்கள் திவ்வியகர்த்தரின் திராட்சைச் தோட்டத்திலே இன்னும் அநேகவருடகாலம் அப்போஸ்தலதொண்டாற்றிவர எல்லாம்வல்ல இறைவன் திருவருள்பாலிப்பாராக!

## தொழிலாளர் கருதினல் லினட் 84-ம் வயதில் ஓய்வு பெறுகிருர்

பிரான்சுதேச லில்நகர மேற்றிராணியாராக 40வருடம் தொண்டாற்றியகருதினல் லினட் தமது 84-ம்வயதில் ஓய்வு பெறுகின்றார். இவர் அத்தேசத் தொழிலாளிகளினுல் பெரிதும் நேசிக்கப்பட்டுவந்தவர். லில் பிரிவு நெசவுத்தொழில், இரும்புத் தொழில் முதலியனவற்றிற்குப் பெயர்போன பிரிவு—அங்கே தொழிலாளர் வேலைநிறுத்தம் இடைக்கிடை செய்வதுண்டு. இவ்வேலை நிறுத்தங்கள் நியாயமானவை எனக்கண்டால் கருதினலடிகள் தொழிலாளர் பக்கமாக இறுதிவரையும் வாதாடுவார். இதனுல் முதலாளிமார் கருதினலவர்களை அதிகம் நேசிக்கவில்லை. சில முறைகளில் திருச்சபை மேலதிகாரிகளுக்கு இவரைப்பற்றி முறைப்பாடுசெய்து பல விசாரணைகளுக்கு இவரை உட்படுத்தியதும் உண்டு. இவ்விசாரணைகளின் இறுதியில் கருதினலவர்களின் செயல் சரியென ஒத்துக்கொள்ளப்பட்டது.

● நோர்வேதேச பட்டத்து இளவரசரான ஹால்டு அரசகுடும்பத்தைச் சேராத சாதாரண பிரசையான ஒரு பெண்ணை மணஞ்செய்யவிருக்கின்றார். 31வயதுடைய ஹாலடுஇளவரசர் குமாரி சோனஜா ஹால்ட்சன்என்ற 30வயதுடையபெண்ணையே மணஞ்செய்யவிருக்கின்றார்.


மின்சாரத்தில் இயங்கும்

சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயில் இயங்கும்

சென்றிக்

யூனியர்—சீனியர்



பாரம் குறைந்த

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

எமது பலதரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களுடன் அறிமுகப்படுத்துகிறோம்

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஆண்டு சித்திரைமீ 6-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org